திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலகளின் கழிவுநீரால் சுற்றுப்புறம் பாதிக்கப்படுதல்.

225—(*வினா எண். 1370) திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் சுற்றுப்புறம் பாதிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்லில் உள்ள 36 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ. 2.42 கோடி செலவில் ஒரு பொதுக் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத பிற தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எடுக்கும் நடவடிக்கையை கண்காணிப்பு செய்து வருகிறது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கட்டுப்பாடு இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் இந்த கழிவுநீரைக் கட்டுப்படுத்தி சுத்திகரிப்பு ஆலையைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. ஆலை முதலாளிகள் கட்ட வேண்டிய மொத்தப் பணம் 40 லட்சம் ரூபாய். அவர்கள் நினைத்தால் ஒரு மாதத்தில் கட்டி முடித்துவிடலாம். மூன்றாண்டுகள் ஆகியும் கட்டவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ப்பந்தித்தவுடன் 17 லட்சம் ரூபாய் கட்டினார்கள். மீண்டும் அரசு நிர்ப்பந்தித்து முதலாளிகள் கட்ட வேண்டிய பணத்தை கட்டச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கழிவு நீரால் சிறிய விவசாயிகள் சாகுபடி நிலத்தை, சாகுபடி வருவாயை இழந்திருப்பதால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் உத்தேசம் எதுவும் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மே 5]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இந்த அரசிடம் இல்லை.

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நுழைவு வாயிலில் மண் அடைப்பு.

226—(*வினா எண். 1320)— திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் நுழைவு வாயிலில் அடிக்கடி மண் அடைப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் பராமரிப்பு, மத்திய அரசினால் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சென்னை, மீன்பிடித் துறைமுக நிர்வாகக் குழுவிடம் உள்ளது. மணல் மேடுகள் உருவாவதைத் தடுக்க மீன் வளத்துறையால், நேரிடையாக நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது. இருப்பினும், துறைமுகத்தினுள் மணல் சேர்ந்து அதனால் படகுப் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுமானால் மீன்பிடித் துறைமுகப் பொறுப்பு கழகத்தைச் சேர்ந்த நிர்வாகக் குழுவினரை அணுகி மணல் மேட்டை அகற்ற மீன்வளத் துறை இயக்குனரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகத்தில் மீன்களைப் பதப்படுத்தி வைக்க அறைகளைக் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக வினா எழுப்பினால் விடை அளிக்க இயலும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.டி. நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகிற இந்த மீன்பிடித் துறைமுகத்தை கழக அரசு ஏற்று நடத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.